**துணுக்காய் பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 03 ஏப்ரல் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 31 யூலை 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 10 ஒக்டோபர் 2019 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள் விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து துணுக்காய் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும்போதும் அவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருக்கின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய ஆண்டுகளினதுமாக சபையினது நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறுபட்ட விஸ்தீரணங்களில் அவற்றின் பெறுமதிகள் மதிக்கப்பட்டிருக்காத 30 காணிகளும் மற்றும் கூட்டுமொத்தம் ரூபா 1,917,672 பெறுமதியிலான வேறுபட்ட 04 காணிகளும் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இவற்றுக்கான உறுதிகள், நில அளவை வரைபடங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின்போது அவற்றை திருப்திகரமாக சான்றுப்படுத்த முடியாதிருந்தது. | சபைக்குரித்தான ஆதனங்களினை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் முறையான கருத்தொருமைப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கமைவாக வரையறுத்து அவற்றின் காணி உறுதிகளைப் பெற்று நில அளவை வரைபடங்கள் மூலமான அத்தாட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது அரச விலை மதிப்பீட்டாளரின் மூலம் அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு காணி ஆணையாளரூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு காணிகளை மதிப்பீடு செய்வதற்காக காணி மதிப்பீட்டு திணைக்களத்திடமும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஏழு கொடுப்பனவுகளுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 3,600,338 பெறுமதியான கணிய அளவுச் சிட்டைகள், வேலை நிறைவேற்று சான்றிதழ்கள், பெறுகைக்குழுவின் தீர்மானக் குறிப்பு போன்றன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் சான்றுப்படுத்தப்பட்ட பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தற்போது சான்றுபடுத்தப்பட்டுள்ளன. |

**(இ) நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 1988 ம் ஆண்டு பிரதேச சபை நிதி நிர்வாக விதியின் அத்தியாயம் VII இன் பிரிவு 17 இன் உபபிரிவு 168(i) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தபோதும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 03 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் காலதாமதம் அவதானிக்கப்பட்டது. | வருடாந்தம் நிதிக்கூற்றுக்களினை மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அனைத்து நடவடிக்கைகளும் நிதியாண்டு 2020ல் சீராக மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல்கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | காசுப்பாயசல்கூற்று இவ்வாண்டிலிருந்து தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) | அத்தியாயம் II இன் பிரிவு 66 | 10,189,336 பெறுமதியான வருமான நிலுவைகளினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் வருமான நிலுவைகளினை உரியவாறு அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயலாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | • இதில் குத்தகை அறவீடு ரூபா 86,681.26 தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த நபர் இறந்த காரணத்தினால் நிலுவையினை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>• நீதிமன்றத் தண்டம் இனிவரும் காலங்களிலேயே கிடைக்கப்பெறும். அறவிடப்பட்ட வாடகை,முச்சக்கரவண்டி வாடகை ரூபா 64.450.00 என்பவற்றின் பற்றுச்சீட்டுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.<br>• முத்திரை தீர்வை ரூபா 252,549.00 கிடைக்கப்பெற்றுள்ளது. மீதி ரூபா 1,485.00 பெற்றுக்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி மதிப்பீட்டு பதிவேடு பராமரிக்கப்பட்டு வருடாந்தம் நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து ஆதனவரி தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படும். |
| (iii) | அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி மதிப்பீட்டினை விரைவாக மேற்கொண்டு சோலை வரியினைக் கணிப்பீடு செய்து வருடமொன்றுக்கான சோலை வரியினை ஒவ்வொரு காலாண்டிலும் சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆதனங்களிலிருந்து உரியவாறு அறவிடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து சோலை வரி தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படும். |
| (iv) | அத்தியாயம் III இன் பிரிவு 59 மற்றும் 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு சபையின் செயலாளரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து வியாபார வரி தொடர்பான கணிப்பீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மேற்கொள்ளப்படும். |
| (v) | அத்தியாயம் IV இன் பிரிவு 108 | துணுக்காயில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள இப்பூங்காவினை முறையாகப் பராமரித்து சிறுவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சபைநிதி மூலமாகவோ/ ஏனைய நிதியுதவிகள் மூலமாகவோ இதற்கான நிதி ஏற்பாடுகளை பெற்று வேலைகளை முடிவுறுத்தி பூங்காவை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (vi) | அத்தியாயம் IX இன் பிரிவு 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலர்களிடம் உரிய காலத்தில் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மேற்படி எமது சபையில் தற்பொழுது முதலாவது கையொப்பதாரர், இரண்டாவது கையொப்பதாரர், களஞ்சியத்தை கையாளும் முகாமைத்துவ உதவியாளர், நான்கு சாரதிகள் ஆகியோரது பிணைப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைந்நூல் பிரிவு 5.4.12 | பெறுமதிசேர் வரி சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்துவரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை | குறிப்பிடப்பட்டிருக்கும் கைந்நூலின் பிரிவு 5.4.12 இற்கமைவாக குறித்தவொரு மாதத்தில் செலுத்தப்பட்டிருக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விபரங்களை உடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க தொடர் நடவடிக்கையானது சபையினால் | சபையினால் செலுத்தப்படும் VAT தொடர்பான விபரங்கள் இனிவரும் காலங்களில் உரிய காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதன் |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுதல் அவசியமானது. | பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். 2019 இலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 137 | சபையின் தவிசாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காது காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 73,150 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கொடுப்பனவானது நிதிப்பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | ஒழுங்கு விதி இல 137 தொடர்பாக குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளன. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த பிடிபண வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 02 தொடக்கம் 05 ஆண்டுகளாக ரூபா 93,947 வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த நிலையிலுள்ள இத்தகைய வைப்புக்களினை உரியவாறு அடையாளங்கண்டு மீளளிப்பதற்கு அன்றேல் அவற்றினைச் சீர்செய்வதற்கு அன்றேல் முறையான அனுமதியுடன் உரியவாறு அரசிறைக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 07 காலம் கடந்த வைப்புக்களில் 4 வைப்புக்கள் திரண்டநிதிக்கு மாற்றப்பட்டுள்ளன ஏனையவற்றில் 1 வைப்பு மீளளிக்கப்பட்டுள்ளது 1 திரண்ட நிதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது 1 வைப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(ஈ)** பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | | | |
| அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம். | சபையின் 09 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் பயன்பாட்டிலுள்ள எரிபொருள் நுகரும் சகல வாகனங்களுக்கும் பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலரொருவர் முன்னிலையில் ஆகக் குறைந்தது வருடத்திற்கு | 2018ம் ஆண்டில் நுகர்வு பரீசிலனை மேற்கொள்ளப்படவில்லை எனினும் இவ்வாண்டில் 02 யூலை 2019 ல் மேற்படி பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. |

ஒரு தடவையேனும் எரிபொருள் நுகர்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு வாகன நாளாந்த ஓட்ட அட்டவணையின் மூலம் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,337,630 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பானமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,543,402 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகைகள் | 4,485,450 | 2,656,630 | 2,609,480 | 151,131 | 4,368,000 | 2,261,422 | 2,141,522 | 119,900 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,054,000 | 796,000 | 796,000 | – | 215,000 | 293,500 | 293,500 | – |
| (iii) | ஏனைய வருமானம் | 6,847,500 | 11,895,397 | 4,776,856 | 10,038,205 | 4,000,000 | 5,050,879 | – | 5,050,879 |
| | **மொத்தம்** | **12,386,950** | **15,348,027** | **8,182,336** | **10,189,336** | **8,583,000** | **7,605,801** | **2,435,022** | **5,170,779** |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானது கடை வாடகை, குத்தகைக் கட்டணங்கள், சேவைக்கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் என்பவற்றினை உரியவாறு அறவிட்டுக்கொள்வதில் நலிவான நிலை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்த வருமானம் ரூபா 2.63 மில்லியனானது மீளாய்வாண்டிற்குரிய அத்தகைய வருமானங்கள் ரூபா 10.02 மில்லியனில் 26 சதவீதமாகவும் நேர்முன்னைய ஆண்டுகளிலுமாக அறவிடப்பட வேண்டியதான கூட்டுமொத்தம் ரூபா 15.4 மில்லியனில் 16 சதவீதமாகவும் இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வருமான நிலுவைகளின் காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | சபையினால் அறவிடப்பட வேண்டிய வருமான நிலுவைகளை உரியவாறு கணிப்பீடு செய்து வருடாந்தம் அவற்றினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் நிலுவையாகவுள்ளவற்றின் காலப்பகுப்பாய்வினையும் வருடாந்தம் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இவ்வாண்டிலிருந்து வருமான நிலுவைகளின் காலப் பகுப்பாய்வின் அடிப்படையில் அறிக்கையிடப்படும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய ஆண்டுகளுக்குமான கடை வாடகை, முச்சக்கரவண்டி வாடகை, குத்தகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 151,131 அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆறு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகவுள்ள குத்தகைக் கட்டணம் ரூபா 86,681 இனை அறவிட்டுக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | சபையின் முன்னய ஆண்டுகளுக்கான கடை வாடகை, முச்சக்கர வண்டி வாடகை, குத்தகை நிலுவைகள் மொத்தம் ரூபா 64,450 அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,784,171 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 254,034 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | சபைக்குரித்தான நீதிமன்ற தண்டப் பணங்களினை அவை உரித்தாக்கப்பட்டு ஒரு வருட காலத்தினுள் பிரதம செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொண்டு செயலாற்றுவதற்கு சபையினால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நீதிமன்றத் தண்டம் இனிவரும் காலங்களிலேயே கிடைக்கப்பெறும். மற்றும் முத்திரைதீர்வை கட்டணம் ரூபா 254,034 இல் ரூபா 252,549 அறவிடப்பட்டுள்ளது. மீதி ரூபா 1,485 அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதாரம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அனைத்து வகையான செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமானது நேர்முன்னைய வருடத்தின் இறுதியில் தயாரிக்கப்பட்டு உரியவாறு அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சபை அபிவிருத்தி வேலைக்கான செயல் நடவடிக்கை திட்டம் (Action Plan) ஏற்கனவே தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூழங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பில் சபையினால் வினைத்திறன் மிக்க பொறிமுறை பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். | கிடைக்கப்பெறுகின்ற குப்பைகள் Compost மீள்சுழற்சி முறை மூலம் பயன்படுத்துவதற்கு போதாமையினாலும் அதற்குரிய இயந்திர செலவீனம் அதிகமாக காணப்படுவதனாலும் மீள் சுழற்சிமுறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உள்ளுராட்சி அமைச்சின் அனுமதியுடன் முன்னெடுப்பதற்கான ஆவணங்கள் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையானது பாதீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளாது கூட்டுமொத்தம் ரூபா 32.44 மில்லியன் பெறுமதியான நிதியை கடந்த 01 தொடக்கம் 10 ஆண்டுகளாக வங்கியொன்றின் நிலையான வைப்புக்களில் முதலீடு | நிலையான வைப்புக்களினைப் பயன்படுத்தி அல்லது அவற்றின் வருமானங்களிலிருந்து செயற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவற்றினை உரியவாறு திட்டமிட்டு | சபையின் நிலையான வைப்புக்களானவை 2016ம் ஆண்டிற்கு பின்னர் வைப்புச்செய்யப்படாததுடன் மேற்படி வைப்புக்கள் மீளப்பெறப்பட்டு சபையின் அபிவிருத்தி மற்றும் வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | முறையான அனுமதியின் பின்னர் செயற்படுத்தப்பட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | |
| (ஆ) | பல்வேறுபட்ட அரச மற்றும் தனியார் அமைப்புக்களினால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த நீர்தாங்கி, உழவு இயந்திரம் போன்ற 08 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்க நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற நீர்தாங்கி, உழவு இயந்திரம் போன்ற 08 வாகனங்களினை சபைக்கு உரித்தானதாக்குவதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படுதல் வேண்டும். | உழவுஇயந்திரம், உழவுஇயந்திரப்பெட்டி கலிபௌசர் ஆகியவற்றிக்குரிய பதிவு நகல்கள் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | சபைக்குரித்தான நீர்தாங்கி மற்றும் இழுவைப்பெட்டி என்பவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 05 தொடக்கம் 06 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் விடுபட்டிருந்தன. | இயந்திரங்களின் பெறுமதிகள் உரியவாறு அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீர்த்தாங்கி ஒன்றிற்கான பெறுமதி 2018ம் ஆண்டு இறுதிக்கணக்கறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.<br><br>இழுவைப்பெட்டியின் பெறுமதி இவ்வாண்டிலேயே மதிப்பிடப்பட்டுள்ளமையினால் இவ்வாண்டு இறுதிக் கணக்கறிக்கையில் பெறுமதி சேர்க்கப்படும். |
| (ஈ) | சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் 25 வகையான கணணி மற்றும் உதிரிப்பாகங்கள் பெறுமதிகள் கடந்த 04 தொடக்கம் 08 ஆண்டுகளாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் விடுபட்டிருந்தன. | சபையினால் நன்கொடையாகப் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுவரும் கணணி மற்றும் உதிரிப் பாகங்களின் பெறுமதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | குறித்த 25 வகையான கணினி மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பெறுமதிகள் விலைமதிப்பீட்டிற்கான குழுவினுடாக மதிப்பீடு செய்யவும் இவ்வாண்டு கணக்கறிக்கையில் அவற்றின் பெறுமதியை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. |
| (உ) | சபைக்குரித்தான 34 அலுவலக மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 05 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்ளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான | சபைக்குரித்தான அலுவலக மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | குறித்த 34 வகையான அலுவலக மற்றும் தளபாட உபகணங்களின் பெறுமதிகள் இவ்வாண்டு கணக்கறிக்கையில் பெறுமதியை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் விடுபட்டிருந்தன. | | |
| (ஊ) மீளாய்வாண்டில் 09 மூலதன வேலைத்திட்டங்கள் கூட்டுமொத்தம் ரூபா 6 மில்லியன் பெறுமதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தன. இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை. | வருடாந்தப் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களினை பயன்மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டு வேலைகள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**பதவி வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் சபையின் செயலாளர், முன்பள்ளி ஆசிரியர், நூலகர், சந்தை மேற்பார்வையாளர்கள் நாளதுவரை நியமிக்கப்பட்டிருக்காமையால் சபையின் பொது நிர்வாகச் செயற்பாடுகள், மழலைகள் கல்வி, நூலகப் பயன்பாடுகள் மற்றும் சந்தைச் செயற்பாடுகளினை கவனித்தலில் நலிவுகள் அவதானிக்கப்பட்டதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரின் வெற்றிடம் காரணமாக சபையினது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உரியவாறு செயற்படுத்தலுக்கு தடையாகவுள்ளமையும் கணக்காய்வுக்கு அறியக்கிடைத்திருந்தது. | சபையின் நாளாந்த கருமங்கள் மற்றும் செயல்நிறைவேற்றலுக்கு செயலாளர், முன்பள்ளி ஆசிரியர், நூலகர், சந்தை மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை பெற்றுக் கொடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் 2020ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் இதற்கான கட்டட மற்றும் தளபாட உபகரணங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அவ்வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலிருந்த திருத்தம் செய்யப்படவேண்டிய இரு வாகனங்கள் கடந்த 03 | வாகனங்களினை உரிய காலத்தில் திருத்தம் செய்து வினைத்திறனான | உழவு இயந்திரத்திற்கு பெருமளவான நிதி செலவிடப்பட்டு பல தடவைகள் |

| | | |
|---|---|---|
| தொடக்கம் 08 மாதங்களாக உரிய திருத்தங்களின்றி களஞ்சியத்தில் விடப்பட்டிருந்தன. | வகையில் பயன்பாட்டிற்கேற்றதாக மாற்றியமைக்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | திருத்தம் மேற்கொள்ளப்பட்ட போதும் அடிக்கடி திருத்தங்கள் ஏற்பட்டு இயங்காத நிலையில் காணப்படுகின்றது. இதனுடைய உரிமைமாற்றம் செய்யப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.4.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 கூரைத்தகடுகள் கடந்த 01 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியசாலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதியும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | கூரைத்தகடுகளின் பெறுமதியினை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 10 கூரைத்தகடுகள் மல்லாவி மரக்கறிச் சந்தை திருத்தத்தின் போது கழற்றப்பட்டு தற்போது அலுவலகத்தில் உள்ளது. இவை சபையினால் மேற்கொள்ளப்படும் பிறிதொரு வேலைக்கு பயன்படுத்தப்படும் என்பதுடன் இவற்றின் பெறுமதி உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான சபையின் வரவுசெலவுத்திட்டம் சரியான பொறிமுறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்காமையால் மதிப்பிடப்பட்ட ஆறு வகையான செலவினம், உண்மைச்செலவினம் என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 10 சதவீதம் தொடக்கம் 52 சதவீதம் வரையிலும் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம் என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 14 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ள விடயங்களினை உரிய பொறிமுறையின் ஊடாக திட்டமிட்டு கணிப்பீடு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு உள்ளபோதிலும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் என்பன கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் சிறந்த முறையில் இடம்பெற்று வருவதோடு பரிசோதனை அறிக்கைகள் உள்ளகக் கணக்குப் பரிசோதனை கோப்பில் இடப்பட்டுள்ளதோடு தவறுதலாக தங்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |